**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.STC.208/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | வேணுமாதவன் | Prosecution | PW-1 Cross |
| Father Name | பார்த்தசாரதி | Defence | |
| Village | சீர்காழி | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 54/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**12.03.2026**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எதிரிக்கு எதிராக மயிலாடுதுறை நீதிமன்றத்தில் ஒரு காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. எதிரி எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் குபேந்திரன் என்பவர் மூலமாக பழக்கம். எதிரியின் வீடு எங்கு உள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது ஆனால் அவர் பணி புரியும் கல்லூரி எனக்கு தெரியும். எதிரி என்ன பணி செய்கிறார் என்றால் திருவண்ணாமலையில் உள்ள கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரியில் பகுதிநேர விரிவுரையாளராக பணிபுரிகிறார். எதிரி என்ன பாடம் நடத்துகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லும்போது அவரிடமிருந்து கடனுறுதி சீட்டு அல்லது கடன் பத்திரம் ஏதாவது எழுதி வாங்கிக் கொண்டேனா என்றால் இல்லை. எதிரிக்கு எப்போது பணம் கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் **22.09.2024** அன்று எனது வீட்டில் வைத்து இரவு **8** மணி அளவில் கொடுத்தேன். நான் பணம் கொடுத்த போது என்னோடு வேறு யார் இருந்தார்கள் என்றால் எனது

அண்ணன் பிரசாந்த் குமார் இருந்தார்.

குபேந்திரன் மூலமாகத்தான் எதிரி பழக்கம் என சொல்லும் நிலையில் எதிரி கடன் கேட்டது சம்பந்தமாக குபேந்திரன் இடம் கூறினேனா என்றால் கூறினேன் ஆனால் அதற்கு அவர் அது பற்றி எனக்கு தெரியாது நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார். எதிரிக்கு கடன் கொடுத்ததற்கு சான்றாக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதற்கு சான்றாவனமாக தான் அவர் கொடுத்த காசோலையை தாக்கல் செய்துள்ளேன். எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை எனக்கு எப்படி கிடைத்தது என்பது பற்றி இந்த வழக்கு புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் கடன் கொடுப்பதை தொழிலாக செய்கிறேனா என்றால் இல்லை.

எதிரிக்கு கொடுத்த பணத்தை வங்கியில் இருந்து எடுத்துக் கொடுத்ததற்கு சான்றாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் அந்த பணத்தை வங்கியில் இருந்து எடுத்துக் கொடுக்கவில்லை எனது கையிருப்பில் வைத்திருந்த குத்தகை பணத்திலிருந்து கொடுத்தேன். பொதுவாக பிறருக்கு கடன் கொடுக்கும் நபர்கள் கடன் பெறும் நபரிடமிருந்து சொத்து பத்திரம் உள்ளிட்ட ஆவணங்களை வாங்கி வைத்துக் கொள்வார்கள் என்றால் சரிதான். எதிரி என்னிடம் பணத்தை இரண்டு மாதங்களில் திரும்பத் தந்து விடுவதாக கூறியதால் நான் எந்த ஆவணங்களும் பெற்றுக் கொள்ளவில்லை. கடன் கொடுப்பதற்கு முன்பு எதிரிக்கு எவ்வளவு சொத்து பத்துக்கள் உள்ளது என்பது பற்றி விசாரித்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் சொல்லி உள்ளது போல நான் பணம் எதுவும் எதிரிக்கு கடனாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

குபேந்திரன் எதிரியும் தொழில் ரீதியான தொடர்பு கொண்டவர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது ஆனால் அவர்கள் இருவரும் ஒருவருக்கு ஒருவர் கல்லூரி கால நண்பர்கள் ஆவார்கள். எதிரி எனக்கு எத்தனை வருடமாக பழக்கம் என்றால் மூன்று வருடங்களாக பழக்கம். எதிரியும் குபேந்திரனும் இறால் பண்ணை தொழில் கூட்டாக செய்தது

பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தனிப்பட்ட முறையில் குபேந்திரன் என்னிடம் இதுவரை கடன் வாங்கி உள்ளாரா என்றால் இல்லை. குபேந்திரன் எனக்கு நெருங்கிய நண்பர் என்றால் சரிதான். உண்மையில் இந்த வழக்கு காசோலை தொழில் ரீதியாக எதிரியால் குபேந்திரன் வசம் கொடுக்கப்பட்டது என்றாலும் நான் அதனை தவறாக பயன்படுத்தி இந்த பொய் வழக்கை எதிரிக்கு எதிராக ஜோடித்து தாக்கல் செய்து உள்ளேன் என்றாலும் சரியல்ல.

நான் எதிரியை இதுவரை பார்த்ததே கிடையாது என்றால் தவறு நாங்கள் இருவரும் மூன்று முறை சந்தித்துள்ளோம். எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றாலும் அதற்காக காசோலை ஏதும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறு விசாரணை இல்லை.**